**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | | 76/2016 |
| | | D/W's | | **DW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ராஜேஸ்வரி | CASTE | : | |
| W/O | பூமிநாதன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | தெத்தூர் | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 53 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2026**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 4 வது பிரதிவாதி ஆவேன். வழக்கின் அனைத்து விவரமும் எனக்குத் தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது தான். எனது தரப்பில் நிரூபணம் செய்ய கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| வ. எண் | தேதி | ஆவணம் | தன்மை | குறியீடு |
|---|---|---|---|---|
| 1. | 20.08.2014 | கிரைய உடன்படிக்கை | நகல் | பி.வா.சா.ஆ.1 |
| 2. | --- | 1 வது பிரதிவாதி பெயரிலான பட்டா | இணையதள நகல் | பி.வா.சா.ஆ.2 |
| 3. | --- | வில்லங்கச் சான்றிதழ் | இணையதள நகல் | பி.வா.சா.ஆ.3 |
| 4. | --- | ராஜேஸ்வரியின் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் | பி.வா.சா.ஆ.4 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளை எனக்குத் தெரியும். வழக்கை வாதிகள் சொத்து கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்குத் தரப்பினர்களை எனக்கு சுமார் 20 வருடங்களாக தெரியும். நான் 35 வருடங்களாக எனது கிராமத்தில் குடியிருக்கிறேன். மேற்படி காலம் முழுவதும் வழக்கின் தரப்பினர்களை எனக்குத் தெரியும். நான் கிரைய

உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டபோது வழக்குச் சொத்தின் பட்டா மற்றும் பத்திரம் 1வது பிரதிவாதி பெயரில் இருந்தது என்றால் பட்டாவை நான் பார்த்தேன் அவர் ஒரு பத்திரம் வைத்திருந்தார் அதை காண்பித்தார் அதை நான் பார்க்க மறுத்துவிட்டேன். 1வது பிரதிவாதி பெயரில் பட்டா இருப்பதால் அவர் காண்பித்த பத்திரத்தை நான் பார்க்கவில்லை. தாவா சொத்து பூவன் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான், அவருடைய மகன் பெயரில் பட்டா இருந்தது.

2. பூவன் செட்டியாருக்கு இரண்டு மகள்கள் ஒரு மகன். மேற்படி இரண்டு மகள்கள்தான் வாதிகள் என்றால் சரிதான். பூவன் செட்டியாருக்கு உள்ள வாரிசுகள் விவரம் தெரிந்துகொண்டு வாதிகளை விட்டுவிட்டு 1வது பிரதிவாதியிடமிருந்து மட்டும் கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் அவர் பெயரில் பட்டா இருந்ததால் ஒப்பந்தம் போட்டேன். 1வது பிரதிவாதியின் பெயரில் தவறாக ஏற்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.1 உடன்படிக்கையில் வாதிகள் தரப்பினர்களாக இல்லாததால் அந்த ஒப்பந்தம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3. பி.வா.சா.ஆ.1 பத்திரத்தின்படி அதன் தேதியிலிருந்து மூன்று வருடங்களில் கிரையம் போட்டுக்கொள்ள வேண்டுமென்று உள்ளது. அந்த மூன்று வருடங்களுக்குள் வாதிகள் வழக்கு தாக்கல் செய்து விட்டார்கள் என்றாலும் சரிதான், ஆனால் அதே சமயத்தில் 1வது பிரதிவாதி உடல்நிலை சரியில்லாமல் இருந்து இறந்துவிட்டார். 1வது பிரதிவாதி வழக்குத் தாக்கல் செய்த சமயத்தில் இறந்துவிட்டார். 1வது பிரதிவாதி 13.12.2017ல் இறந்தார் என்றால் எனக்குத் தெரியாது.

4. வாதிகள் வழக்கை தாக்கல் செய்த காலத்திற்குபின் பி.வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தின் படி கிரையம் ஏற்படுத்த சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் எடுக்கவில்லை. எனது எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை நான்தான் எனது வழக்குரைஞரிடம் சொன்னேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலும் எனது எதிர்வழக்குரையிலும் வழக்குச் சொத்தின் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லவில்லை என்றால் எனக்குத் தெரியாது.

5. வழக்குச் சொத்தில் நான் அனுபவத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் 1வது பிரதிவாதியும் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை காலாவதியாகிவிட்டது என்றாலும், அதன்படி நான் எந்த நிவாரணமும் கேட்க முடியாது என்றாலும் சரியல்ல. நானும், 1வது பிரதிவாதியும் சேர்ந்து வாதிகளுக்கு

பாகப்பிரிவினை கிடைக்கக்கூடாது என்று பொய்யாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்பதால்தான் அதை நடைமுறைபடுத்த நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பழனியம்மாளின் தூண்டுதலின்படி வழக்கின் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கம் செய்ய வைத்து இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**5 முதல் 7, 9 முதல் 11 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/–
M.P. ராம்கிஷோர்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**///TRUE COPY///**